# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2304/17 - 2022 නොවැම්බර් මස 01 වැනි අඟහරුවාදා - 2022.11.01

*2304/17 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு சட்டத்தின் 44(5) ஆவது உறுப்புரையின் பிரகாரம், அரசியலமைப்பு சட்டத்தின் 44 (1) ஆம் உறுப்புரையின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர்களுக்குரிய கடமைகளும் பணிகளும் கையளிப்பது உடனடியாக நடைமுறையிலுள்ளவாறு இதன்கண் கீழ் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பெற்றவாறு அமைந்துள்ளனவென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பிரசன்ன ரணதுங்க,**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
பத்தரமுல்லை,
2022, ஒற்றோபர் 26.


1A - G 37928 — 11 (2022/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை (I)

**1. மாண்புமிகு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர், தேனுக விதானகமகே அவர்கள்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் மதியுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக் கப்பட்ட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்த மைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br><br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br><br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக் கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப் படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறை களையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br><br>4. குடிசைகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுநர்களுக்காக வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்<br><br>5. நடுத்தர வகுப்பினரின் வீட்டுப் பிரச்சினை களைத் தீர்ப்பதற்குப் புதிய வீட்டுக் கருத் திட்டங்கள் நடைமுறைப்படுத்துதல் மற்றும் கடன் வசதிகளை வழங்குதல்<br><br>6. வாடகை அடிப்படையில் தற்காலிக இருப்பிடங் களை எதிர்பார்ப்போருக்கு நியாயமான வாடகை அடிப்படையில் தொடர்மாடி வீட்டுத் திட்டமொன்றை அறிமுகம் செய்தல்<br><br>7. வீடமைப்பு நிர்மாண நிறுவனங்களுக்கு நிவாரண விலையின்கீழ் காணிகளை வழங்குவதன் மூலம் புதிய வீட்டுக் கருத்திட்டங்களுக்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல் | 1. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை<br><br>2. கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை (பொது வசதிகள் சபை)<br><br>3. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை<br><br>4. அரச பொறியியல் கூட்டுத்தாபனம்<br><br>5. தேசிய உபகரணங்கள் அமைப்பாண்மை<br><br>6. ஓஷன் விவ் டிவலப்மெண்ட் பிறைவேட் லிமிட்டெட் | • நகரக்குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் (1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க)<br><br>• இருப்பிடக்கூறு சொத்தாண்மைச் சட்டம் (1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க)<br><br>• இருப்பிடக் கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள் சட்டம் (2018 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க)<br><br>• இருப்பிடக் கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள் சட்டம் (1999 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக<br><br>• பொது வசதிகள் சபைச் சட்டம் (1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க)<br><br>• தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் (1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க)<br><br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித் துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 8. கூட்டாதனச் சொத்துக்கள் முகாமை மற்றும் ஒழுங்குறுத்தல் பணிகள்<br><br>9. குறைந்த வருமானம் பெறுநர்கள் மற்றும் விசேட சமுதாயக் குழுக்கள் அடங்கலான பொதுமக்களின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வீடமைப்புத் திட்டங்களையும் வீடமைப்பு நிதியுதவி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப் படுத்துதல்<br><br>10. பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி பின்தங்கிய கிராமியப் பிரதேசங்களின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிளை விருத்தி செய்தல்<br><br>11. பொறியியல் உசாத்துணைச் சேவைகள் மற்றும் நிர்மாணப் பணிகள் | | |

**அட்டவணை (II)**

**2. மாண்புமிகு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர், அருந்திக பெர்னாந்து அவர்கள்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 01. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் மதியுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் பேரில் அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத் திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற் படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br><br>02. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேய ரீதியிலும் பெற்றுக்கொடுத்தல் | 1. செலென்திவ இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டெட்<br><br>2. ஹொட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) தனியார் கம்பனி (PQ143)<br><br>3. கட்டிடத் திணைக்களம்<br><br>4. அரசாங்கத் தொழிற் சாலைகள் திணைக்களம்<br><br>5. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை<br><br>6. கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை | • நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் 1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க)<br><br>• கட்டிடக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் (2014 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க)<br><br>• கடல்சார் மாசடைவு தடுப்புச் சட்டம் (2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க)<br><br>• கரையோரப் பாதுகாப்புச் சட்டம் (1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க) |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 03. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக் கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br><br>04. மாநகர, உப நகர, புறநகர் அபிவிருத்தி திட்டங்களும் அதற்கு இணையான அபிவிருத்தியும்.<br><br>05. நகர்ப்புறங்களின் பொருளாதாரம், சமூக மற்றும் பௌதீக அபிவிருத்திகளை ஒருங்கிணைத்து முறைப்படி மேம்படுத்தலும் மற்றும் ஒழுங்குறுத்தலும்<br><br>06. குடிசைகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுநர்களுக்காக வீடமைப்புக் கட்டிடத்தொகுதிகளை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்<br><br>07. நடுத்தர வகுப்பினரின் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் புதிய வீட்டுக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்துதல் மற்றும் கடன் வசதிகளை வழங்குதல்<br><br>08. வாடகை அடிப்படையில் தற்காலிக இருப்பிடங்களை எதிர்பார்ப்போருக்கு நியாயமான வாடகை அடிப்படையில் தொடர்மாடி வீட்டுத் திட்டமொன்றை அறிமுகம் செய்தல்<br><br>09. வீடமைப்பு நிர்மாண நிறுவனங்களுக்கு நிவாரண விலையின்கீழ் காணிகளை வழங்குவதன் மூலம் புதிய வீட்டுக் கருத்திட்டங்களுக்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்<br><br>10. நகரப்புறத் திண்மக் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம்<br><br>11. பொறுப்பற்ற கழிவகற்றலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்<br><br>12. சகல நகர நிர்மாணங்களையும் நகர அபிவிருத்தித் திட்டங்களுக்கமையச் செய்வதை ஒழுங்குறுத்துவதற்குத் தேவையான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்<br><br>13. அரசாங்க நிறுவனங்களுக்கு இயந்திரமயப் பொறியியல் சேவைகளை வழங்குதல் | 7. கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம்<br><br>8. அறுவக்காலு கழிவுப்பொருள் கருத்திட்டம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 14. தொடர்புடைய சட்டதிட்டங்கள் மற்றும் தரவளவுகளுக்கமைய நிர்மாணக் கைத் தொழில்துறையின் பணிகளை ஒழுங்குறுத்து தலும் பதிவு செய்தலும் முறைசார்படுத்தலும் தரப்படுத்துதலும் | | |
| 15. நிர்மாணக் கைத்தொழிலுக்குரிய ஆலோசனை மற்றும் ஒழுங்குறுத்தல் சேவைகளை வழங்குதல் | | |
| 16. கனரக நிர்மாணத்துறை உபகரணங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பற்றிய பயிற்சி | | |
| 17. உள்நாட்டு நிர்மாணக் கலைஞர்களை வலுப் படுத்துதல் | | |
| 18. உள்நாட்டு சிறிய மற்றும் மத்திய தர துணை ஒப்பந்தக்காரர்களை வலுவூட்டுதலும் பாது காப்பு வழங்குதலும் | | |
| 19. சமுத்திர மாசுபடல் நிவாரண நடவடிக்கைகள் | | |
| 20. சமுத்திர மற்றும் சமுத்திரம் சார்ந்த மாசு படலைத் தடுப்பதற்காக செயலாக்கத் திட்ட மொன்றைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும் | | |
| 21. கடலோரப் பேணல் மற்றும் பாதுகாப்பு | | |
| 22. கழிவுப்பொருட்கள் அகற்றுவதன் காரண மாக கடற்பரப்பு மற்றும் கடற்படுக்கைக்கு ஏற்பட் டுள்ள சேதங்களைத் தவிர்ப்பதற்காக சமுத்திர துப்புரவேற்பாட்டு வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துதல் | | |

EOG 11-0001

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.